23.02.2026

O.S.No.239/2024

PW1- சந்திரா – க/பெ. ராஜீ

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 4ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

2. எனக்கு எழுத படிக்கத் தெரியும் என்றால் சரிதான்.

3. என் மகள் சுவாதி கடையநல்லூர் மருத்துவமனையில் வைத்து கடந்த 29.08.2006 ல் பிறந்தார் என்றால் சரிதான்.

4. குழந்தை பிறந்ததும் குழந்தைக்கு பெயர் வைப்பது, தாய், தந்தையர் முகவரி மற்றும் பெயர் ஆகியவற்றை நான் தான் மருத்துவமனை நிர்வாகியிடம் தெரிவித்தேன் என்றால் சரிதான்.

5. கடையநல்லூர் நகராட்சியரிடம் நான் தான் என் குழந்தை பதிய சொல்லி விவரங்களை பூர்த்தி செய்து விண்ணப்பம் அளித்தேன் என்றால் இல்லை.

6. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் நான் தான் விண்ணப்பம் செய்தேன் என்றும் தற்போது வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. 2007ம் வருடம் ஜனவரி மாதம் என் குழந்தையின் பெயரை திருத்தம் செய்யக் கோரி கடையநல்லூர் நகராட்சியில் நான் அளித்த விண்ணப்பத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. அசல் மனுவை தாக்கல் செய்தால் என் வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. நான் கோரும் பரிகாரம் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 9ன் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் பெயர் திருத்தம் செய்யக்கோரி உரிய வழிமுறையை பின்பற்றாமல் நீதிமன்றத்தை நாடுவது தவறு என்றும் எனவே என் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல

10. என் மகளுக்கு இயற்கை பாதுகாவலர் என்ற மனுவை தாக்கல் செய்யாமல் நேரடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

11. நான் வழக்கில் எனக்காக எந்த பரிகாரமும் கோராமல் என் மகளுக்காக பரிகாரம் கோரும் நிலையில் என் மகள் வழக்கில் அவசிய தரப்பினர் என்றும் என் மகளை கட்சி சேர்க்காததால் என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/--J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி